முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் தை மாதம் 08 திகதி முதல்

சுபகிருது வருடம் தை மாதம் 15 திகதி வரை

(22.01.2023 ஞாயிறு முதல் 29.01.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கதிர்வேலவனே கந்தப்பெருமானே
   கருணைவைத்து கலியுகம் தனில்
   உதித்தாய் ஆறுமக அரங்கனாக
   உன் அவதார மகிமை போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷியும்
   புகலுவேன் இந்தியா தமிழகம்தனில்
   ஆற்றல்பட சுபகிருது கலைதிங்கள்
   அட்டமதிகதி மேல் மூவை திகதி வரை
3. வரைநடக்கும் எதிர்கால பலன்குறித்த
   வார நிகழ்வாக ஆசியுரைப்பேன்
   திரைமறைவாக நடந்த குற்றம்
   தேசமெல்லாம் அம்பலத்தில் வந்து
4. வந்துமேவெளிப்படையாக நடக்க
   வதைக்கும் வளர்ச்சியை தடுக்கும்
   இந்த ஊழல் தன்மை முழுக்க
   இந்தியா தமிழகத்தை விட்டு அகலவேணும்
5. அகல்வதற்கு கொடுப்பவன் பெறுபவனென
   அனைவருமே திருந்த வேண்டும்
   வகையிலா இந்தநிலை தொடர்ந்தால்
   வறுமைக்கோடு எனும் பாதகநிலை
6. பாதகநிலை அவலம் எல்லாம்
   பாரதம் தமிழகம் விட்டகலா
   சோதனைகள் தொடர நேரும்
   சுயநலம் விட்டு சேவை வழியில்
7. வழியில் ஆளுமை சக்திகள்
   வாய்ப்புத் தா வளர்ச்சித் தா எனவும்
   பழிபாவம் நேரா ஆளுமை புரிய
   பரிபக்குவமும் தா என வேண்டி
8. வேண்டியே அரங்க ஞானி வழி
   விடாது உலகோர் மகிழவே
   தொண்டராக இணைந்து வர

தீட்சை ஆசி அடைந்து வர

9. வருகவே கரும வினை விலகி
வள்ளல் தன்மை தானும் பெருகி
முருகப்பெருமானே தலைவனெனும்
முழுமை ஞானம் கிட்டி மாற்றம்

10. மாற்றம் ஆளுமையில் நடக்கும்
மக்களை காக்கும் பலமான
ஆற்றல்மிக்க ஞானத்தலைமையாக
ஆளுமையாகத் தமிழ்நாடு இந்தியா கண்டுத் தேறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் தை மாதம் 08 ம் நாள் 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 15 ம் நாள் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஞானமே வடிவாகிய கதிர்வேலனே கந்தபெருமானே கலியுக மக்களின் துயரம் போக்கிட கலியுக மக்களின் மீது கருணைகொண்டு மாயைசூழ் கலியுகத்தினில் முருகா தாமே ஆறுமுக அரங்கமகா தேசிகராக அவதரித்திட்டாயப்பா. அற்புதம் மிக்க உமது அவதார நோக்கத்தையும் உமது மகிமைகளையும் வியந்து போற்றியே அகத்திய மகரிஷி யானும் சுபகிருது வருடம் தைமாதம் 08 ம் நாள் 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தைமாதம் 15 ம் நாள் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

முற்காலங்களிலே திரைமறைவாக நடந்திட்ட ஊழல் குற்ற செயல்கள் தற்காலத்தில் தேசமெங்கும் வெளிப்படையாகவே நடக்கின்றதப்பா. ஊழல் பெருகியதாலே மக்களை துன்பத்திற்கு உள்ளாக்குவதோடு நாட்டின் அனைத்து துறைகளின் வளர்ச்சிகளையும் தடுக்கிறதப்பா இப்படிப்பட்ட பயமற்ற முறையிலே நடக்கும் ஊழல் இனிமேலாகினும் இந்தியா தமிழகத்தை விட்டு அகல வேண்டுமப்பா. ஊழல் புரிவதற்கு காரணமானவர்கள் லஞ்சம் கொடுப்பவர்களும், லஞ்சம் பெறுபவர்களும், திருந்திட வேண்டுமப்பா.

இனியும் ஊழல் செய்வதை விட்டு விடாமல் தொடர்ந்து செய்து வந்தால் மக்கள் வறுமையில் இருந்து மீள முடியாத துர்பாக்கிய நிலையினை அடைவார்களப்பா. மக்களுக்கு மேன்மேலும் சோதனைகளும், துன்பங்களும் தொடருமப்பா.

ஆதலினாலே அவரவரும் சுயநலத்தை விட்டுவிட்டு சேவை மனப்பான்மையுடன் நடந்து மக்களுக்கு முன்னேற வாய்ப்பளித்தும் வளர்ச்சி பாதையினை உருவாக்கியும் பழிபாவம் நேராத

வகையிலே ஆட்சி புரியவும் வாய்ப்புகளை தாருங்கள் கடவுளே என எல்லாம்வல்ல முருகப்பெருமானை பக்தியுடன் வேண்டி வணங்கி பூசைகளை செய்து வரவேண்டுமப்பா.

தயவே சிறந்தது சன்மார்க்கமே உண்மை மார்க்கம் என உலகிற்கு வலியுறுத்தி உண்மை ஞானம் போதிக்கும் அரங்கமகானின் தூய ஞான சன்மார்க்க நெறியினை உலகமக்கள் எல்லாம் ஏற்று கடைபிடிப்பதுடன் அரங்கனிடத்து தொண்டர்களாக இணைந்து, தீட்சை உபதேசம் பெற்று வாழ்ந்திட அவரவரைப் பற்றிய முன்ஜென்ம பாவங்களால் வருகின்ற கரும வினைகள் எல்லாம் விலகி அவரவருள்ளும் தரும சிந்தை பெருகி வள்ளலாகி முருகப்பெருமானே தலைவன் என்கிற பேருண்மையும் விளங்கி அவர்களுக்கு முழுமைஞானம் கிடைத்து ஆட்சி முறையில் அற்புத மாற்றங்கள் உருவாகுமப்பா. அந்தவித ஆட்சியர்களால் நாட்டினில் மக்களைக் காக்கும் தயவுமிக்கதும் அருள்பலம் மிக்கதும் வல்லமையும் கூடிய ஞானத்தலைமைகள் உருவாகி ஞான ஆட்சியாக இந்த நாடு உருவாகிடும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி

–சுபம்–